பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14
ஆசிரியர் அறிமுகம் 21
இஸ்லாமிய அறிவுத்தேடலின் அடிப்படை விதிகள் 27
முதல் அடிப்படை 41
இரண்டாம் அடிப்படை 48
மூன்றாம் அடிப்படை 53
நான்காம் அடிப்படை 61
ஐந்தாம் அடிப்படை 75
ஆறாம் அடிப்படை 78
ஏழாம் அடிப்படை 85
எட்டாம் அடிப்படை 91
ஒன்பதாம் அடிப்படை 98
கல்வியை அடைவதற்கான பத்து வழிகள் 103
ஷெய்க் அஹ்மது அந்நஜ்மீ அவர்களின் மதிப்புரை 105
முன்னுரை 107
முதல் வழி 108
இரண்டாவது வழி 110
மூன்றாவது வழி 111
நான்காவது வழி 114
ஐந்தாவது வழி 116
ஆறாவது வழி 117
ஏழாவது வழி 118
எட்டாவது வழி 119

ஒன்பதாவது வழி 120

பத்தாவது வழி 121

இஸ்லாமியக் கல்வியைத் தேடும்போது 123

1 இஸ்லாமியக்கல்வியின் சிறப்புகளும் முக்கியத்துவமும் 125

2 மனத்தூய்மை 131

3 தேடல் 136

4 தன்னடக்கம் 141

5 வெட்கம் கூடாது 145

6 பிரார்த்தனையும் கற்றதின்படிச் செயல்படுதலும் 148

கல்வியின் அருமை இயல்பாகவே தெரியும்

கல்வி (இல்ம்) மிகவும் முக்கியமானது என்பதை எல்லா முஸ்லிமும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். கல்வியின் அருமை யாருக்கும் தெரியாத இரகசியம் அல்ல. ஆகவேதான் எல்லோரும் தமக்கு அறிவு உண்டு என்கிறார்கள். முட்டாள்கூட தன்னை முட்டாள் என்று அழைப்பதை விரும்பமாட்டான். அவனை அறிவாளி என்று கூப்பிட்டால் அவனுக்கு மகிழ்ச்சி. அலீ இப்னு அபீதாலிப் ﷺ சொல்கிறார்கள்:

கல்வி இல்லாதவர்கள்கூட தமக்குக் கல்வி இருப்பதாக வாதிப்பதும், அவர்களைக் கல்வி உள்ளவர்கள் என்று சொன்னவுடன் மகிழ்ச்சி அடைவதுமே கல்வியின் அருமைக்குப் போதிய ஆதாரமாகும். மேலும், அறியாமை தன்னிடம் இருக்கக் கூடாது என்று அறியாமையில் இருப்பவர்கள் கூட விரும்புவது, அதன் இழிவுக்குப் போதிய ஆதாரமாகும். (தத்கிரத் அஸ்ஸாமிஃ வல்முத்தகல்லிம், பக்கம் 10)

சிந்திப்பது முக்கியம்

1. சிலர் தாமாகவே முன்வந்து 'எனக்கு இது தெரியும், அது தெரியும்' என்று காட்டிக்கொள்கிறார்களே, அதற்குப் பெயர் என்ன? அப்படி நடப்பது சரியா?
2. என் பாட்டன், முப்பாட்டனுக்குத் தெரியாதது உமக்குத் தெரியுமோ? என் தலைவருக்குத் தெரியாதது உமக்குத் தெரியுமோ? இந்த வாதங்கள் ஏன் உருவாகின்றன?

கல்வியின் அருமையை முஸ்லிம் அறியாதிருப்பாரா?

கல்வியின் சிறப்பையும் கல்வியாளர்களின் சிறப்பையும் கண்டு கொள்ளாமல் எப்படித்தான் ஒரு முஸ்லிம் இருக்க முடியும்? அந்த முஸ்லிம்,

قُلْ هَلْ يَسْتَوِي الَّذِينَ يَعْلَمُونَ وَالَّذِينَ لَا يَعْلَمُونَ

(நபியே!) அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாக முடியுமா? எனக் கேளுங்கள் (குர்ஆன் 39:9)

என்ற வசனத்தை ஓதுகிறார்.

சிந்திப்பது முக்கியம்

கல்வியின் சிறப்பு குறித்து எவ்வளவோ அறிகிறோம். இப்படி அறிவதாலே அதன் நன்மைகளை அனுபவித்துவிட முடியுமா?

முதலில் கல்வி; அப்புறம் செயல்

இமாம் புகாரீ ﵀ தம் ஸஹீஹ் (அல்புகாரீ) நூலின் கல்வி குறித்த பாடப் பகுதியில் இந்தக் கருத்தை விளக்கியுள்ளார்கள்:

الْعِلْمُ قَبْلَ الْقَوْلِ وَالْعَمَلِ.لِقَوْلِ اللهِ تَعَالَى :فَاعْلَمْ أَنَّهُ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ فَبَدَأَ بِالْعِلْمِ.

அறிவு என்பது சொல்வதற்கும் செயல்படுவதற்கும் முன்பே வருவதாகும். (அதாவது, ஒன்றைச் சொல்வதற்கும் செய்வதற்கும் முன்பு அது குறித்து அறிவைப் பெற வேண்டும்.) ஏனெனில் அல்லாஹ், "(நபியே!) நன்கு அறிந்துகொள்ளுங்கள்: வணக்கத் திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை'' (47:19) என்று கூறுகிறான். இந்த வசனத்தில், அறிந்துகொள் வதைப் பற்றி முதலில் குறிப்பிடுகிறான்.

وَأَنَّ الْعُلَمَاءَ هُمْ وَرَثَةُ الأَنْبِيَاءِ- وَرَّثُوا الْعِلْمَ - مَنْ أَخَذَهُ أَخَذَ بِحَظٍّ وَافِرٍ ، وَمَنْ سَلَكَ طَرِيقًا يَطْلُبُهِ عِلْمًا سَهَّلَ اللَّهُ لَهُ طَرِيقًا إِلَى الْجَنَّةِ.

அறிஞர்கள்தாம் (உலமா) நபிமார்களின் வாரிசுகள் ஆவார்கள். வாரிசுச் சொத்தாக அவர்கள் விட்டுச் சென்றது கல்வியைத்தான். யார் அந்தக் கல்வியை எடுத்துக்கொண்டாரோ, அவரே நிறைவான பாக்கியத்தை எடுத்துக்கொண்டவர். யார் கல்வியைத் தேடி ஒரு பாதையில் போகிறாரோ, அவருக்குச் சொர்க்கத்தின் பாதையை அல்லாஹ் எளிதாக்குகிறான். அல்லாஹ் கூறுகிறான்:

وَقَالَ جَلَّ ذِكْرُهُ : إِنَّمَا يَخْشَى اللَّهَ مِنْ عِبَادِهِ الْعُلَمَاءُ

"நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்குப் பயந்த வர்கள், கல்வியாளர்கள் மட்டுமே." (குர்ஆன் 35:28)

وَقَالَ : وَمَا يَعْقِلُهَا إِلاَّ الْعَالِمُونَ

"(உதாரணங்களாக நாம் குறிப்பிட்ட) இவற்றை அறிஞர்கள் தவிர யாரும் புரிந்துகொள்ள மாட்டார்கள்." (குர்ஆன் 29:43)

وَقَالُوا لَوْ كُنَّانَسْمَعُ ، أَوْ نَعْقِلُ مَا كُنَّا فِي أَصْحَابِ السَّعِيرِ

முதல் அடிப்படை

❀

الأَصْلُ الْأَوَّلُ : طَلَبُ الْعِلْمِ الَّذِي يَحْتَاجُهُ الْمُسْلِمُ لِلْقِيَامِ بِمَا يَجِبُ عَلَيْهِ مِنْ عِبَادَةِ رَبِّهِ فَرْضٌ وَاجِبٌ عَلَيْهِ، وَمَا زَادَ عَلَى ذَلِكَ فَتَحْصِيْلِهِ مِنْ بَابِ فُرُوضِ الْكِفَايَاتِ وَهُوَ لِطَالِبِ الْعِلْمِ مِنْ بَابِ الْمُسْتَحَبَّاتِ وَالْفَضَائِلِ

தன் இறைவனை வணங்குவதற்கு எந்தக் கல்வி தனக்கு அவசியமோ அதைத் தேடுவதே ஒரு முஸ்லிம் மீது கட்டாயமாகும். இதற்கு அதிகமாக அவர் தேடும் கல்வி அனைத்தும் ஃபர்ள் கிஃபாயா என்ற வகையைச் சேர்ந்தவை. அதாவது, சமுதாயத்தில் சிலர் கற்றுக்கொள்வதே போதுமானது. கல்வியைத் தேடும் மாணவருக்கு இந்த வகை விரும்பத்தக்கது (முஸ்தஹப்பு). சிறப்புக்குரியது.

இதற்குரிய ஆதாரம் நபிமொழியில் வந்துள்ளது.

طَلَبُ الْعِلْمِ فَرِيضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ

இஸ்லாமிய அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீது கட்டாயக் கடமை. (அறிவிப்பு: அனஸ் இப்னு மாலிக் ﷺ, சுனன் இப்னுமாஜா 224, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 72)

இன்னொரு ஆதாரம், இந்த மார்க்கம் இரண்டு அடிப்படை விதிகள் மீது அமைந்துள்ளது. அதாவது,

1. நாம் அல்லாஹ்வைத் தவிர யாரையும் வணங்கமாட்டோம்.
2. அல்லாஹ்வை அவனுடைய மார்க்கச் சட்டங்களின் அடிப்படையில்தான் வணங்குவோம்.

ஒருவர் தமக்கு அல்லாஹ் கடமையாக்கிய வணக்கங்களை எப்படிச் சரியாக செய்வது என்பதை முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த நோக்கத்திற்குத்தான் அல்லாஹ் அவரைப் படைத்தான். அவருக்கு அவசியமான கல்வி இதுதான். இதைப் பெறாத வரை அவர் உண்மையாக அல்லாஹ்வை வணங்கிவிட முடியாது.

பொறுப்புணர்வுடன் இருப்பது முக்கியம்

கடமைகள் பற்றிய சட்டத்தைப் புரிந்துகொள்கிறோம். அதாவது, ஒவ்வொரு மனிதரும் அவர் மீது கடமையான அமல்களுக்கு அவரே பொறுப்பாளி. சிறுவர், சிறுமிகளைப் பொறுத்த வரை அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய மார்க்க விஷயங்களைக் கற்றுக்கொடுப்பது அவர்களின் பெற்றோர் மீது கடமை. உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள். உங்கள் பொறுப்பில் உள்ள வர்கள் குறித்து உங்களை விசாரிக்கப்படும் என்றார்கள் நபியவர்கள்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلَائِكَةٌ غِلَاظٌ شِدَادٌ لَا يَعْصُونَ اللَّهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ

விசுவாசிகளே! உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து காத்துக்கொள்ளுங்கள். அதனுடைய எரிகட்டை, மனிதர்களும் கற்களுமாகும். அதில் கடினச் சித்தமுடைய பலசாலி களான மலக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு ஏவியதில் சிறிதும் மாறுசெய்ய மாட்டார்கள். அவர்கள் (வேதனை செய்யுமாறு) தங்களுக்கிடப்பட்ட கட்டளை களையே செய்து வருவார்கள். (குர்ஆன் 66:6)

ஆக, முஸ்லிம் தாய் தந்தை தம்முடைய குழந்தைகளுக்கு அவர் கள் அறிந்திருக்க வேண்டிய மார்க்க விஷயங்களையும் நல்ல ஒழுக்கங்களையும் கற்றுத்தருவது கடமையாகும்.

முஸ்தஹப்பான கல்வியிடம் எச்சரிக்கை

மார்க்கக்கல்வியைத் தேடும் மாணவர், தாம் எதைக் கற்றிருப்பது கட்டாயமோ அதைக் கற்றுக்கொள்ளவே முன்னுரிமை தர வேண் டும். விரும்பத்தக்கது என்ற வகையிலான (முஸ்தஹப்பு) கல்வியைக் காட்டிலும் கட்டாயமான கல்விக்கே முன்னுரிமை தரவேண்டும். இதை விட்டுவிட்டு அவருக்கு விரும்பத்தக்கது என்ற வகையிலான கல்வியையே அவர் கற்றுக்கொண்டிருந்தால், இதுவும் கல்வியைத் தேடுவதில் அவர் எதிர்கொள்ளும் தடைக்கற்களில் உள்ளதாகும்.

உதாரணத்திற்கு, நீங்கள் பார்த்திருக்கலாம். ஒருவர் மொழியில் வல்லுநராகி, நுணுக்கமான இலக்கணச் சட்டங்களையும், வார்த்தைப் பிரயோகங்களையும், சொல் நயங்களையும், விதிகளையும் பேசுவார். ஆனால், அல்லாஹ்வின் தூதர் ﷺ வுளூ செய்த முறைப்

அழுக்கான மனமுள்ளவர்கள் அபாயத்தில் இருக்கிறார்கள்

வேறு சிலரும் இருக்கத்தான் செய்தார்கள். அவர்கள் தங்களின் அழுக்கடைந்த எண்ணங்களுடன் கல்வியைத் தேடினார்கள். அதாவது, உலக ஆதாயத்திற்காகவும் மக்களிடம் பேரும் புகழும் அடைவதற்காகவும் தேடினார்கள். இறுதியில், அவர்கள் எதிர்பார்த்ததை உலகிலே அடைந்துகொண்டார்கள்.

ஒரு நபிமொழி கூறுகிறது:

مَنْ غَزَا فِي سَبِيلِ اللَّهِ وَلَمْ يَنْوِ إِلَّا عِقَالًا فَلَهُ مَا نَوَى

யார் அல்லாஹ்வின் பாதையில் போர் புரியச் சென்று, வெற்றிப் பொருள் (கனீமத்) அடைவதை மட்டும் நாடினாரோ, அவருக்கு அவர் நாடியதுதான் கிடைக்கும். (அறிவிப்பு: உபாதா இப்னு ஸாமித் ﷺ, சுனன் நசாயீ 3151, ஸஹீஹ் அல்ஜாமிஃ 6401)

இந்த வகையான மக்கள், மார்க்கக்கல்வியின் ஒளியால் வெளிச்சம் பெறாதவர்கள். அது அவர்களின் உள்ளங்களில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அவர்களின் அமல்களில் குறிப்பிடத்தக்க எந்த முடிவையும் உண்டாக்கவில்லை. உண்மையில் அல்லாஹ்வுக்கு அஞ்சுபவரே கல்வியாளர்.

வேறு சிலரோ, தாங்கள் கற்ற கல்வியால் அதிகாரத்தை அடைந்து கொண்டார்கள். ஆனால், மக்களை நசுக்கினார்கள். கல்வியின் முக்கிய விஷயங்களை ஒதுக்கிவிட்டார்கள். பெரும்பாவங்களில் விழுந்தார்கள். இழிவான காரியங்களில் ஈடுபட்டார்கள். அவர்களுக்குக் கேடுதான். அவர்கள் அறிஞர்கள் அல்ல.

இன்னும் சிலர், தாங்கள் கற்ற கல்வியின் விஷயத்தில் அல்லாஹ்வுக்குப் பயப்படவில்லை. தந்திரமான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். தடுக்கப்பட்டதையும் அனுமதித்து ஃபத்வா கொடுத்தார்கள். ஆதாரமற்ற, அடிப்படையற்ற செய்திகளை அறிவித்துக்கொண்டிருந்தார்கள்.

சிலர், துணிந்து அல்லாஹ்வின் விஷயத்தில் பொய் சொன்னார்கள். ஹதீஸ்களின் பெயரால் இட்டுக்கட்டினார்கள். ஆனால், அல்லாஹ் அவர்களை அம்பலப்படுத்தினான். அவர்களின் கல்வி அவர்களை விட்டுச் சென்றது. அவர்களின் தயாரிப்பு அனைத்தும் நரகத்திற்கு என்றானது.

நான்காம் அடிப்படை

❀

الأَصْلُ الرَّابِعُ : الْعِلْمُ هُوَ قَوْلُ اللهِ وَرَسُوْلِهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَقَوْلُ الصَّحَابَةِ مَعَ الْإِجْمَاعِ وَالْقِيَاسِ الصَّحِيْحِ.

அல்லாஹ்வின் சொல், அவனுடைய தூதரின் சொல், தூதருடைய தோழர்களின் சொல் இவையே கல்வி. இதனுடன் இஜ்மாஃ (நபித்தோழர்கள் காலத்திலிருந்து இருந்துவரும் ஒருங்கிணைந்த முடிவு), சரியான கியாஸ் (ஒப்புநோக்கி எடுக்கப்படும் சட்ட ஆய்வு முறை) இவையும் அடங்கும்.

எனவே, நபித்தோழர்களும் மனத்தூய்மையில் அவர்களைப் பின்பற்றியவர்களும் எப்படி குர்ஆனையும் நபிவழியையும் புரிந்துகொண்டார்களோ அந்த ஒளியில்தான் நாமும் அவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இதுதான் முஃமின்களின் பாதை என்கிறான் அல்லாஹ்.

وَمَنْ يُشَاقِقِ الرَّسُولَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدَى وَيَتَّبِعْغَيْرَ سَبِيلِ الْمُؤْمِنِينَ نُوَلِّهِ مَا تَوَلَّى وَنُصْلِهِ جَهَنَّمَ وَسَاءَتْ مَصِيرًا

எவர் நேரான வழி இன்னதென்று தமக்குத் தெளிவான பின்னரும் அல்லாஹ்வுடைய இத்தூதரை விட்டுப் பிரிந்து நம்பிக்கையாளர்களின் பாதை அல்லாததில் செல்கிறாரோ அவரை நாம் அவர் செல்கின்ற பாதையிலே செல்லவிட்டு, பின்பு அவரை நரகத்தில் சேர்த்துவிடுவோம். செல்கின்ற இடங்களில் அதுவே மிகக் கெட்டது. (குர்ஆன் 4:115)

கீழுள்ள வரிகளைக் கவனியுங்கள். எவ்வளவு அருமையான வரிகள்!

الْعِلْمُ قَالَ اللَّهُ قَالَ رَسُولُهُ... قَالَ الصَّحَابَةُ لَيْسَ خُلْفٌ فِيهِ
مَا الْعِلْمُ نَصْبُكَ لِلْخِلَافِ سَفَاهَةً... بَيْنَ النُّصُوصِ وَبَيْنَ رَأْيِ سَفِيهِ
كَلَّا وَلَا نَصْبُ الْخِلَافِ جَهَالَةً... بَيْنَ الرَّسُولِ وَبَيْنَ رَأْيِ فَقِيهِ
كَلَّا وَلَا رَدُّ النُّصُوصِ تَعَمُّدًا... حَذَرًا مِنَ التَّجْسِيمِ وَالتَّشْبِيهِ

ஆறாம் அடிப்படை

❀

الأَصْلُ السَّادِسُ: عَوَائِقُ الطَّلَبِ.

இஸ்லாமிய அறிவைத் தேடும் பாதையில் ஏற்படக்கூடிய தடங்கல்கள்.

சொர்க்கத்திற்குச் செல்லும் பாதை கடினங்களால் சூழப்பட்டது போலவே மார்க்கக்கல்வியின் பாதையும் மனஇச்சைக்கு எதிரான விஷயங்களால் (ஒருவருக்குப் பிடிக்காத விஷயங்களால்) சூழப் பட்டுள்ளது.

மார்க்கக்கல்வியானது சொர்க்கத்தின் பாதையை எளிதாக்குகிறது. ஷைத்தானோ சொர்க்கத்தின் பாதைகளைத் துண்டித்துவிட சபதம் செய்திருக்கிறான். எனவே, இந்தக் கல்வியின் பாதையிலிருந்து ஒருவரைத் திசைதிருப்பி தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள என்னென்ன ஏமாற்றுத்தனங்கள் உள்ளனவோ, அத்தனையையும் ஷைத்தான் செய்வான்.

எல்லாப் பாவங்களுக்கும் அடிப்படை மூன்று விஷயங்களில் உள்ளன. அவை: பேராசை, பொறாமை, தற்பெருமை.

பேராசை கூடாது

பேராசைதான் நம் தந்தை ஆதம் ﷺ அவர்களைச் சொர்க்கத்திலிருந்து வெளியேற்றியது. அவர்கள் சொர்க்கத்தின் மீது கொண்டிருந்த ஆர்வத்தை வைத்து மனதில் பேராசையைத் தூண்டிவிட்டான் ஷைத்தான்.

فَوَسْوَسَ لَهُمَا الشَّيْطَانُ لِيُبْدِيَ لَهُمَا مَا وُورِيَ عَنْهُمَامِنْ سَوْآتِهِمَا وَقَالَ مَا نَهَاكُمَا رَبُّكُمَا عَنْ هَذِهِ الشَّجَرَةِ إِلَّاأَنْ تَكُونَا مَلَكَيْنِ أَوْ تَكُونَا مِنَ الْخَالِدِينَ

அவ்விருவருக்கும் மறைந்திருந்த அவர்களுடைய மானத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக ஷைத்தான் (பேராசையை) அவர்கள் மனதில் ஊசலாடச் செய்து அவர்களை நோக்கி, "(அதன்

ஏழாம் அடிப்படை

❀

الأَصْلُ السَّابِعُ: وَسَائِلُ تَثْبِيْتُ الْعِلْمِ. مِنْ أَهَمِّ وَسَائِلِ تَثْبِيْتِ الْعِلْمِ: العَمَلُ بِهِ، وَتَعْلِيْمِهِ وَالتَّأْلِيْفُ فِيْهِ.

இஸ்லாமிய அறிவைப் பாதுகாத்துத் தக்க வைப்பதற்கு மிகவும் சிறந்த வழிகள்:

1. கற்றுக்கொண்டபடி செயல்படுவது

2. மற்றவர்களுக்கு அதைக் கற்றுக்கொடுப்பது

3. அது தொடர்பான விஷயங்களை எழுதி வைத்துக்கொள்வது

இந்த மூன்று வழிமுறைகளும் அல்லாஹ்வின் பின்வரும் வார்த்தைகளில் கூறப்பட்டுள்ளன.

وَالْعَصْرِ إِنَّ الْإِنْسَانَ لَفِي خُسْرٍ إِلَّا الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِوَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ

காலத்தின் மீது சத்தியமாக! மனிதன் (தன் ஆயுளை வீணில் செலவு செய்து) நிச்சயமாக நஷ்டமடைந்துவிட்டான். ஆயினும், எவர்கள் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டு, நற்செயல்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் அறிவுறுத்தி, (பாவங்களை விடுவதிலும் நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படுகின்ற சிரமங்களைச்) சகித்துக் கொள்ளுமாறும் ஒருவருக்கொருவர் அறிவுறுத்தி வந்தார்களோ, அவர்களைத் தவிர. இவர்கள் நஷ்டமடையவில்லை. (குர்ஆன் 103:1-3)

கற்றுக்கொண்டதின்படி செயல்படுங்கள்

எல்லா மனிதர்களும் நஷ்டத்தில் உள்ளதாகவும், ஆனால், யார் ஈமான் கொண்டு, மூஃமின்களாக நிலைத்துள்ளார்களோ அவர்கள் அதிலிருந்து விதிவிலக்கு பெறுவார்கள் என்கிறான் அல்லாஹ். இதற்குக் காரணம் அவர்கள் பயனுள்ள கல்வியைப் பெற்று, அதன்